# 18

# துக்கித்தல்



# SORROW

# 18

## எப்படித் துக்கிக்கக்கூடாது ?

HOW NOT TO SORROW

**1**

இன்ப வேளைகளையே கனவு காணக்கூடாது.

**2**

துக்கவுணர்வுகளை மறைக்கக்கூடாது.

**3**

உலகு சார்ந்த துக்கத்தில் மூழ்கிவிடக்கூடாது.

**4**

கடவுள் அனுப்பும் சிட்சைகளை அவமதிக்கக்கூடாது.

**5**

மனிதருக்குப் பயந்து சாகக்கூடாது.

**6**

சுய பரிதாபத்தில் அமிழ்ந்துவிடக்கூடாது.

**7**

பக்தி முயற்சிகளில் தளரக்கூடாது.

**8**

தீராப் பிரச்னைகளால் திகைக்கக்கூடாது.

**9**

தற்கொலை எண்ணத்திற்கே இடங்கொடுக்கக்கூடாது.

**10**

வரவிருக்கும் மகிமையை மறக்கக்கூடாது.

## 18

# எப்படித் துக்கிக்கக்கூடாது?

### அறிமுகவுரை

■ ஞானிகளில் ஞானியாம் சாலொமோனின் வார்த்தைகள் —

பிர 2:22,23 ... *நாட்கள் ... அலுப்பு ... வேலை ... வருத்தம்*

இவ்வுலகில் துக்கம் இல்லாதவர் எவருமிலர் —

இளைஞரோ முதியவரோ...

செல்வந்தரோ எளியவரோ...

படித்தவரோ படியாதவரோ...

பக்தியுள்ளவரோ பக்தியற்றவரோ...

நாட்டுவாசியோ காட்டுவாசியோ...

துக்கம் அல்ல,

அதைத் தவறாய்க் கையாளுவதே பெரிய பிரச்னை.

■ துக்கத்திற்கு ஒருவரும் தப்பமுடியாது—

யோபு 14:1 ... *குறுகிய வாழ்நாள் ... நிறைய சஞ்சலம்*

எல்லாருக்கும் துக்கம் உண்டு;

வெகுசிலரே அதை மேற்கொள்ளுகின்றனர்—

(உ-ம்) அப்போஸ்தலர் (2 கொரி 6:10அ)

*... துக்கம் ... ஆனால் எப்போதும் சந்தோஷம் ...*

ரோ 8:35 ... *எந்நேரமும் கொல்லப்படுகிறோம்.*

துக்கத்தின் வகைகள் (வச 36)

*... **ஆனாலும்** முற்றும் வெற்றி...*

■ மார்டின் லூத்தர்:

''துக்கங்கள் கொண்டுசெல்லும் பாதையில்தான்

இறையியலை நேர்த்தியாய்க் கற்பீர்கள்!''

சங்கீதக்காரன் சொன்னது இதுவே—

சங் 119:71 ... *உபத்திரவம் ... நல்லது ... கற்கிறேன் ...*

துக்கங்களைச் சரியாய்க் கையாண்டால் இந்நன்மை.

- சங்கீதங்களைப் பொதுவாகத் துதி-ஆராதனைப் புத்தகம் என்போம்; ஆனால் அதில் ஊக்குவிக்கும் ஒரு காரியம்—

  26தான் தொழுகையின் சங்கீதங்கள்;
  56 சங்கீதங்களோ புலம்பலுக்கடுத்தவை!

- நிறைவாழ்வின் காலத்தைவிடத் தாழ்வின் காலத்திலேயே நாம் அதிகம் கற்கிறோம்.

  துக்கத்தையும் துன்பத்தையும் கையாளும் விதமே நமது ஆன்மீகப் பலத்திற்கு அளவீடு.

  நீதி 24:10 ... *சோர்ந்துபோனால் ... பலம் குறுகியது*

- ஒவ்வொரு மொழியிலும் ''துக்கம்'' என்பதற்குப் பல்வேறு வருணனைகள் உண்டு.

  Anglo-Saxon சொல்லானது ஓர் ஓநாய் ஓர் ஆட்டைக் கழுத்தில் கவ்விப்பிடித்துக் கொல்லுவதாக விளக்குகிறது.

துக்கத்தைத் தவறாய்க் கையாண்டால் துக்கத்தின்மேல் துக்கம்தான். அதைப் புதை மணலுக்குத்தான் (quick sand) ஒப்பிடலாம்.

**எப்படித் துக்கிக்கக்கூடாது?**

## 1. இன்ப வேளைகளையே கனவு காணக்கூடாது.

Do not dream of happy times always.

- இந்தப் பாடம் மிக எளிதாய்த் தோன்றலாம்;
ஆனால் இங்குதான் நம்மில் அநேகர் இடறுகிறோம்.

கடுந்துயர்ச் சம்பவங்கள் நம்மைத் தாக்கும்போது
அப்படியே அதிர்ந்துவிடுகிறோம்.

துக்கத்திற்குப் பல காரணங்கள் இருக்கலாம்—
வியாதி ... மரணம் ... நிதி நெருக்கடி ... இழப்பு ...
உறவுப் பிரச்னைகள் ... அநியாயம் ... தோல்விகள் ...
பணியிட மோதல்கள் ... குடும்பப் பிரச்னைகள் ...
நிச்சயமற்ற எதிர்காலம் ... ஊழியத்தில் குழப்பங்கள் ...

விரும்பத்தகாத இந்நிகழ்வுகள் குறித்த வேதப் போதனையில்
நாம் ஊன்றியிருப்பது அவசியம் —

பிரசங்கி சாலொமோன் சொல்வதைக் கேட்போம் —

- பிர 3:1-8 ... முழுப் பகுதியையும் வாசியுங்கள்.
முடிவு: 11
*''**அனைத்தையும்** அதினதின் **காலங்களில்**
நேர்த்தியாய்ச் செய்திருக்கிறார்!''*

நமக்கு நேர்த்தியாய்த் தெரிகிறதோ இல்லையோ,
கடவுள் பார்வையில் இவையெல்லாம் நேர்த்தியே!

எனவேதான் எல்லாச் சூழல்களிலும் நாம் மகிழ்ந்துகொண்டேயிருக்க
அவர் அழைக்கிறார் (வச 12,13).

நாம் சந்திக்கும் பிரச்னைகளைவிட, அவைகளைக் குறித்த
மக்களது எண்ணமே நம்மை அதிகம் பாதிக்கிறது!

*''சஞ்சலத்திற்காகவே மனிதன் பிறந்திருக்கிறான்''*
என்பதை மறக்கிறோம் (யோபு 14:1)

சூரியனுக்குக்கீழ் வாழும் எவரது பங்கும் இதுவே—

பிர 4:1

சங்கீதம் 90இல் ''தேவ மனிதன்'' என அறிமுகப்படுத்தப்பட்டுள்ள **மோசே** கண்டதும் இதுவே—

சங் 90:10 ... *70 ஆண்டுகள் ... 80 ஆண்டுகள் ... வருத்தம்!*

மோசே ஒரு விசுவாச வீரனில்லையா?
அவன் இணையற்ற தீர்க்கனில்லையா?
மோசேயுடன் கடவுள் முகமுகமாய்ப் பேசியதுபோல்
யாரோடும் பேசியிருக்கிறாரா?

துன்ப நாட்களை இன்ப நாட்களால் சமநிலைப்படுத்த வேண்டினான்!

வச 15 ... *துன்பம் கண்ட ஆண்டுகளுக்கு ஈடாக ...*

இவ்விதம் சமநிலைப்படுத்துவதில் ஆதிப்பரிசுத்தர் தேறியிருந்தனர்:

— எரேமியா: புல 3:38 ... *தீமையும் நன்மையும்...*
— சாலொமோன்: பிர 7:14 ... *வாழ்வு காலம் ... தாழ்வு காலம் ...*
— இவ்விதம் சமநிலைப்படுத்துவதில் வித்தகன்: யோபு

- எருதுகள், கழுதைகள் ஓட்டிச்செல்லப்பட்டன (யோபு 1:14,15அ)
- வேலைக்காரர் கொல்லப்பட்டனர் (வச 15ஆ)
- ஆடுகள், வேலையாட்கள் எரிந்துபோயினர் (வச 16)
- வீடு இடிந்து குமாரர், குமாரத்திகள் மாண்டனர் (வச 18,19)
- உடம்பு முழுவதும் கட்டிகள் (2:7)

Mrs. யோபு vs. Mr. யோபு (2:9,10)

திருமதி யோபுவின் ''பைத்தியக்கார'' இறையியலே
இன்றையப் பிரபல உபதேசம்!

■ எல்லாச் சாபங்களிலிருந்தும் கிறிஸ்து நம்மை மீட்கவில்லையா?

— இல்லை, *''பிரமாணத்தின் சாபத்திலிருந்து''* மட்டுமே (கலா 3:13)

உத்திரவாதமான *''ஆசீர்வாதம்''* ஆன்மீகமானதே —
வச 14 ... *ஆபிரகாமின் ஆசீர்வாதம் ... ஆவியானவர்*

— *''வீழ்ச்சியின் சாபத்திலிருந்து''* அல்ல ... ஆதி 3:16,17

*''வேதனை ... துக்கம் ... மரணம் ...''* இன்னும் இருக்கும்!

இவை புதிய வானம் புதிய பூமியில்தான் நீங்கும் (வெளி 21:1-4)

- அதுவரை,

  நாம் **யாவரும்** தவித்துக்கொண்டிருக்கிறோம்:

  ரோ 8:22,23 ... *''நாமும்''* = விசுவாசிகள் விதிவிலக்கல்ல.

  இது ஏதோவொரு வசனம் மட்டுமல்ல;

  மீண்டும்: 2 கொரி 5:1-3 ... *நாம் தவிக்கிறோம்.*

- துன்ப துக்கங்கள் நாம் கடவுளது வழிகளைவிட்டுத்

  தூரம் போவதால்தான் வருபவையல்ல;

  நாம் திருச்சித்தத்தின் மையத்திலிருந்தாலும் அவை வரலாம்.

  (உ-ம்) யோசேப்பு ... *தேவனால் ''அனுப்பப்பட்டவன்,''*

  ஆனாலும் ... சங் 105:17-19 ... *ஒடுக்கி, அடைத்து...*

- பிரச்னையே இல்லாத வாழ்வைக் கடவுள் வாக்களிக்கவில்லை—

  ஏசா 43:2 ... *தண்ணீர் ... ஆறு ... நெருப்பு ...*

ஆனால், அவரது பிரசன்னம் நமக்குறுதி:

*''நான் உன்னோடு இருப்பேன்!''*

ஜான் வெஸ்லி: ''கடவுள் நம்மோடிருப்பதே பெரியதில் பெரிது!''

"The greatest of all is, *God is with us!*"

**அதுதான்** கிறிஸ்துவுக்குள்ளான வாழ்வின் ஆசி —

மத் 1:23 ... *இம்மானுவேல்!*

எனவே, இன்ப காலத்தையே கனவுகண்டுகொண்டிராது,

கர்த்தரிலேயே எப்பொழுதும் களித்திருங்கள்!

## 2. துக்கவுணர்வுகளை மறைக்கக்கூடாது.

Do not deny the feelings of sorrow.

- துக்கத்தை வெளிச் சொல்லுவது விசுவாசக் குறைவு என்றும்,
  அது பாதக அறிக்கை என்றும்
  ஒரு துர்வுபதேசம் பரவி வருகிறது.
  இது கேட்க நன்றாயிருக்கும்; திருமறைக்கோ புறம்பானது.
- யோபுவின் புத்தகத்திற்குச் செல்லாமல் துன்ப துக்கம் குறித்த முழுமையான திருவுபதேசம் நமக்குக் கிடைக்காது —

  புதிய ஏற்பாட்டிலும் யோபு ஓர் எடுத்துக்காட்டாயிருக்கிறான்—

  யாக் 5:10,11 ... *சகிப்பு ... யோபுவின் பொறுமை ...*

  அவன் தனது துக்கத்தை வெளிப்படுத்தியதைப் பாருங்கள் —

  யோபு 3:11 ... *நான் பிறந்தநாளில் சாகாததேனோ?*
  6:1-3 ... *என் சஞ்சலம் ... கடற்கரை மணலைவிட*
  7:19 ... *எனது உமிழ்நீரை விழுங்கமுடியவில்லை*
  10:1 ... *எனது ஆன்மாவின் கசப்பைப்* ***பேசுவேன்***
  17:1 ... *எனது பிரேதக்குழி ஆயத்தம்*

  இது விசுவாசக் குறைவோ, தவறான இறையியலோ கிடையாது.

  கடவுளைப் பற்றிய அவனது அறிவைப் பாருங்கள்—

  9:4 ... *ஞானமுள்ளவர்...வல்லவர்...*
  9:10 ... *எண்ணிலடங்கா அதிசயங்கள்*
  10:12 ... *எனக்கு ஜீவனும் தயவும் தந்தீர்.*
  13:15அ ... *அவர் என்னைக் கொன்றாலும்...நம்பிக்கை*
  19:25அ ... *என் மீட்பர் உயிரோடிருக்கிறார்!*

■ தங்கள் துக்கத்தை மறைக்காத இன்னும் பலருண்டு —

(உ-ம்) தாவீதும் அவனது சங்கீதங்களும்.

துவக்கமுதல் முடிவுவரை தனது துக்கத்தைக் கொட்டித் தீர்க்கிறான்:

சங் 6:6,7 ... *பெருமூச்சு ... கண்ணீரில் மிதக்கிறேன்*

சுவாரஸ்யமாக, இயேசுவின் பாடுகளுக்கான பல மேற்கோள்கள் சங்கீதப் புத்தகத்திலிருந்தே எடுக்கப்பட்டுள்ளன —

— பொய்ச் சாட்சிகள் (மாற் 14:57,58 / சங் 27:12)

— உடைகள் பங்கீடு (மத் 27:35ஆ / சங் 22:18)

— பழித்துரை (மத் 27:39 / சங் 22:7)

— பரியாசம் (மத் 27:42 / சங் 69:9ஆ)

— குடிக்கப் புளிப்பான ரசம் (மாற் 15:36 / சங் 69:21)

— *என் தேவனே, என் தேவனே* (மத் 27:46 / சங் 22:1)

தாவீது தனது துக்கங்களை மறைத்திருந்தால்,
இயேசுவின் பாடுகளை விவரிக்கத் தீர்க்கதரிசனம் எங்கே?

■ அடுத்து, தலைசிறந்த எடுத்துக்காட்டு இயேசுதான்—

தமது சீடருக்குமுன் தமது உணர்வுகளை மறைக்கவில்லை:

மத் 26:37 ... *வியாகுலப்படத் தொடங்கினார்*

:38 ... *என் ஆன்மா ஆழ்துயரம் கொண்டுள்ளது*

இதோவொரு துர்வுபதேசம்:

நமது துக்கங்களை இயேசு சுமந்துவிட்டதால்,
நாம் சுமக்கவேண்டிய துக்கம் எதுவுமில்லை!

விவிலியம் போதிப்பதோ இதற்கு முற்றும் வித்தியாசம் —

(உ-ம்) அப்போஸ்தலர்: 2 கொரி 6:10அ ... *துக்கம் ஆனால் சந்தோஷம்*

மகிழ்ச்சியின் நிருபத்தில்கூட — பிலி 3:1;4:4 —
*''துக்கத்தின்மேல் துக்கம்''* என்கிறான் பவுல் (2:27,28)

■ இவையெல்லாம் அம்சமான எடுத்துக்காட்டுகள்;
ஆனால் துக்கத்திற்கு அதிவுன்னத எடுத்துக்காட்டு **தேவனே** —

ஆதி 6:6 ... அவரது எதிர்பார்ப்பு நொறுங்கியபோது!
*கர்த்தர் மனம் வருந்தினார்...விசனப்பட்டார்*

இது முழு மனுக்குலத்தையும் பற்றியது.

தமது மக்களாகிய இஸ்ரவேலரால் ஏமாற்றமடைந்து தமது துக்கத்தை எப்படி வெளிப்படுத்துகிறார், பாருங்கள் —

ஏசா 5:3,4 ... *இதற்குமேல் நான் என்ன செய்ய?*

தீர்க்கதரிசனத்தில் கிறிஸ்துவின் பெயர்களில் ஒன்று:
*''துக்கம் நிறைந்தவர்''* (ஏசா 53:3)
*அவரது முகத்தில்* அது தெரிந்தது (வச 2ஆ)

*''அணைத்துப்போடப்படும்''* அளவிற்குப் பரிசுத்த ஆவியானவர்
*''துக்கப்படுத்தப்பட''* முடியுமே! (எபே 4:30 / 1 தெச 5:19)

■ துக்கத்தை வெளிப்படுத்தும் **கண்ணீர்** கடவுளருளியது —

சில எடுத்துக்காட்டுகளைப் பார்ப்போம்:

□ யோசேப்பு முதலாவது இரகசியமாய் அழுதான் (ஆதி 43:30,31)
(பென்யமீனைப் பார்த்தபோது...)
அடுத்து எல்லாருக்கும் முன்பாக அழுதான் (45:2).
ஒரு கவர்னராக இப்படி அழுவது
ஆண்மையல்ல என அவன் நினைக்கவில்லை!

□ எசேக்கியா ராஜா
சாவுக்கேதுவான வியாதி அறிவிக்கப்பட்டபோது —
ஏசா 38:1-5 ... *சுவர்ப்பக்கம் திரும்பி அழுதான்*
கடவுள் சொன்னது: *''உன் கண்ணீரைக் கண்டேன்!''* (வச 5)

□ லாசருவுக்காக மக்களுக்குமுன் இயேசு அழுதார் (யோ 11:35)
*''இயேசு கண்ணீர் விட்டார்!''*
வேத வசனங்களிலெல்லாம் சிறியது, சீரியது!
லாசருவை எழுப்பப்போவது தெரிந்திருந்தும்!

கண்ணீரானது கடவுளது பார்வையில் விலையேறப்பெற்றது:
சங் 56:8 ... கண்ணீரைத் *தமது தோற்பையில்* சேர்க்கிறார்;
ஜெபங்களைத் *தமது குறிப்பேட்டில்* எழுதுகிறார்.

பைபிள் இதை எங்கும் மறுக்கவில்லை —
*''எந்தச் **சிட்சையும்** சந்தோஷமல்ல, துக்கமே''* (எபி 12:11அ)

■ சில வாழ்க்கைத் துணைகள் தங்களது கணவன் அல்லது
மனைவியின் அடக்க ஆராதனையில் சாட்சி பகர்வர்;
எல்லாராலும் அப்படிச் செய்யவே முடியாது —

இவையெல்லாம் பெரிய விசுவாசம், விசுவாசக் குறைவு என்பதல்ல!

மரணத்தைக் குறித்துக் துக்கிக்கக்கூடாது என்றல்ல;
அவிசுவாசிகள் போல *''நம்பிக்கையற்று''*
*துக்கிக்கக்கூடாது* என்றுதான் பவுல் சொன்னான் —
1 தெச 4:13

அஞ்ஞானப் பழக்கவழக்கங்களே இங்கு குறிப்பு—
உபா 14:1 ... *உடலைக் கீறுவது ... மொட்டையடிப்பது ...*

■ நமது துக்கங்களை மறைக்கவோ, மறுக்கவோ கூடாது;
அதே வேளையில்,
ஒருவர் விடாது சொல்லிக்கொண்டும் அலையக்கூடாது—

வெகு சிலரே உங்களோடு துக்கிப்பர்;
அநேகர் இரகசியமாய் மகிழத்தான் செய்வர்!

எவராது உங்களோடு தனது துக்கத்தைப் பகிர்ந்துகொண்டால்,
அவருக்காய் ஜெபித்து, உற்சாகப்படுத்துங்கள்;
அதைக் கதைபோல் பரப்பவேண்டாம்.

## 3. உலகு சார்ந்த துக்கத்தில் மூழ்கிவிடக்கூடாது.
Do not be immersed in worldly sorrow.

■ இருவிதமான துக்கங்களைப் பைபிள் குறிப்பிடுகிறது —
2 கொரி 7:10 ... *தெய்வீக துக்கம்* vs. *லவுகீக துக்கம்*

தெய்வீக துக்கம் விளைவிப்பது: மனந்திரும்புதல், இரட்சிப்பு
லவுகீக துக்கம் விளைவிப்பது: அழிவு, மரணம்

லவுகீக துக்கமென்பது பொருள் சார்ந்தது,
உடல் சார்ந்தது, பணம் சார்ந்தது;
ஆன்மீகக் காரியங்களைச் சார்ந்ததல்ல.

■ லவுகீக துக்கத்திற்கு எடுத்துக்காட்டுகள்—

☐ உடல் சார்ந்த தேவைகள்
மத் 6:31-33 ... *உணவு ... உடை ...*
இவ்வுலகக் கவலை vs. இறையரசுக்காய்க் கரிசனை

லூக்காவில், *''முதலாவது''* இறையரசை என்றல்ல,
*''இறையரசையே''* தேடுங்கள் என்றுள்ளது (லூக் 12:31)

ஏனெனில், இவ்விதக் கவலைகள் பயனற்றவை—
மத் 6:27 ... *கவலை ... ஒரு முழம்?*
நிவாரணம்: *நமது பிதா அறிவார்* என்ற அறிவு (வச 32)

☐ உடல் ஆரோக்கியம்
3 யோ 2 — இங்கு கேட்கவேண்டிய கேள்வி:
நமது உடலின் நலத்தில் காட்டும் கரிசனை
உள்ளத்தின் நலனில் காட்டப்படுகிறதா?

சுகமளிப்புக்கு முன்னர் பாவ மன்னிப்பு வருகிறது:
சங் 103:3 ... *மன்னித்து ... குணமாக்கி ...*

சுகமடையாமல் பரலோகம் செல்லமுடியும்;

பரிசுத்தமடையாமலோ அது முடியாது!

☐ பொருள் இழப்பு, வியாபாரத்தில் நஷ்டம்

ஆப 3:17-19 ... *அத்தி ... திராட்சை ... இரட்சிப்பு*

எந்த ஆசீர்வாதத்தையும்விட இரட்சிப்பு பெரியது.

மாற் 8:36,37 ... *ஆன்மா இழப்பு ... லாபமென்ன?*

கற்பனை செய்யுங்கள்: உலகம் முழுவதையும் சம்பாதித்தாலும்

ஆத்தும இரட்சிப்புக்குமுன் அது ஒன்றுமில்லை.

உலகின் மிகப் பெரிய செல்வந்தன்கூட

முழுவுலகையும் உடைமை கொள்ளவில்லையே!

☐ பிள்ளைகளின் பிரச்னைகள்

பிள்ளைகள் கடவுள் தரும் ஆசீர்வாதம்;

அதே வேளையில், பிள்ளைகளால் வரும் பிரச்னைகள்

இல்லாத பெற்றோர் அபூர்வம்.

பிள்ளைகளைக் குறித்த நமது கவலை ''உடல், பொருளை''

அடுத்ததாயல்ல, ''ஆவிக்குரியதாய்'' இருக்கவேண்டும்.

— யோபு (யோபு 1:5)

பாடுகளின் இப்புத்தகத்தில் **முதல்** கவலை!

— சாலொமோனைக் குறித்துத் தாவீதின் கவலை:

1 இரா 2:1-4 ... கடைசி வார்த்தைகள்

பிள்ளைகளுக்கு உயரிய கல்வியளிப்பதில் எவ்வளவு ஆர்வம்!

அவர்களது ஆன்மீகத் தேவைகளை மறந்துவிடுகிறோமே—

நீதி 1:7 ... *கர்த்தருக்குப் பயம் ... ஞானம் ஆரம்பம்*

பிள்ளைகள் எவ்வளவுதான் சம்பாதித்தாலும்,

இந்த ஞானம் இல்லையேல் எல்லாம் வீண்!

*''என்னத்தைச் சம்பாதித்தாலும் ... புத்தியை ...''* (4:7)

வெறும் கல்வி தலைவலிதான்—

பிர 1:18 ... *அதிக ஞானம் ... அறிவு ... நோவு*

அவ்விதமே, லட்சக்கணக்கில் சம்பாதித்துச் சொத்துக் குவிப்பு —

பிர 5:13,17 ... *செல்வம் ... கேடு ... இருள்*

லவுகீகத் துக்கத்திற்கு இன்னோர் எடுத்துக்காட்டு—

☐ சொத்துக்கள் இழப்பு அல்லது சேதம்

(உ-ம்) யோனா (யோனா 4:9-11) ... *எரிச்சல் ... பரிதபிப்பு ...*

சவாலான இக்கேள்வியுடன் இப்புத்தகம் முடிகிறது!

■ தமது துக்கத்தில் நாம் பங்கேற்க தேவன் ஆசிக்கிறார்:
அதுவே ''தேவனுக்கேற்ற'' துக்கம் என்பது —

☐ மக்களின் இரட்சிப்பு

ரோ 9:2;10:1 ... *இடைவிடா துக்கம் ... மனவேதனை*

☐ திருச்சபையின் நலன்

2 கொரி 11:28,29 ... பிற பிரச்னைகளுக்கும் மேல் (வச 23-27)

☐ தேவனது வீட்டில் பெருகிவிட்ட கேடுபாடுகள்

ஆகாய் 1:4,9 ... *பாழாய்க் கிடக்கும் என் வீடு ...*

எல்லாரும் 2:19இலுள்ள வாக்கையே நாடுகின்றனர் —

*''இன்று முதல் உங்களை ஆசீர்வதிப்பேன்!''*

முதல் அத்தியாயத்தின் கேள்விகள், சவால்களைச் சந்தியாது
2ஆம் அத்தியாயத்திற்கு விரைவதேன்?

நமது முந்துரிமைகளை (priorities) மாற்ற தேவன் விரும்புகிறார்:
எனவேதான் இருமுறை: *''உங்கள் வழிகளைச் சிந்தியுங்கள்''* (1:5,7)

■ நம்மைவிட அதிகம் பாடனுபவிப்போர்மீது கரிசனை கொள்வதும்
தேவனுக்கேற்ற துக்கமாம் —

☐ எபி 13:3 ... நமக்குச் சிறிய அநியாயம் vs.
சிறைவாசிகளுக்குக் கொடுமை

☐ யாக் 1:12 ... ஏற்கனவே பலவித *''சோதனைகள்,''* இன்னல்கள்;
ஆனாலும் பிறரையும் நினையுங்கள் —

1:27 ... *விதவைகள் படும் உபத்திரவங்கள்*

2:15 ... ஒன்றுமில்லாதோருக்கு உணவுடை

☐ யோபுவுக்கு எளியவர் குறித்த கவலை (யோபு 30:25)

... *எளியவனுக்காய் அழுது ... வியாகுலம் ...*

ஓர் இந்தியன்: ''எனக்கு ஓட்டுரிமை உண்டு; கையிலோ ஓடுதான்!''

■ ஓர் எச்சரிப்பு:

லவுகீக துக்கம் ஆன்மீகத் துக்கத்தை மிஞ்சினால்,
கிறிஸ்தவ வாழ்வில் கனியற்றே இருப்போம் —
மத் 13:22 ... *முள் நெருக்கிய செடி!*

உலக இன்பத்தைவிட ஆன்மீகத் துக்கம் மேல்!

(பார்க்க: பக்கங்கள் 52-54, 104-106, 439-440, 563-565, 755-758)

## 4. கடவுள் அனுப்பும் சிட்சைகளை அவமதிக்கக்கூடாது.

Do not despise God's chastisement.

- இக்கூற்று அப்படியே திருமறையில் உள்ளது —
  எபி 12:5அ ... *என் மகனே, சிட்சையை அற்பமாய் எண்ணாதே*

  இது பழைய ஏற்பாட்டிலிருந்து எடுத்தாளப்பட்டது:
  நீதி 3:11

  அப்படியானால், இது பைபிள் தரும் ''முழுமையான'' போதனை.

- சிட்சையைப் பற்றிய அத்தியாயமாகிய
  எபிரெயர் 12இலிருந்து இரு முக்கிய கூற்றுகள்:

  அ) கடவுள் சிட்சியாத பிள்ளை கிடையாது (வச 7)
  ஆ) எந்தச் சிட்சையும் இன்பமானதல்ல (வச 11)

- சிட்சைக்கான இரு முக்கிய காரணங்கள்:

  எதிர்மறை: பாவத்தைத் தண்டிக்க (punish sin)
  நேர்மறை: பரிசுத்தத்தை வளர்க்க (promote holiness)

  (உ-ம்) முற்காலங்களில் பெற்றோர் பிள்ளைகளை அடித்தது —
  அ) பரீட்சையில் தோல்வியுற்றதற்காக;
  ஆ) நூற்றுக்கு நூறு மதிப்பெண் வாங்காததற்காக!

**(அ)** சிட்சையானது தண்டனையாயிருந்தால்,
வெளிவர ஒரே வழி மனந்திரும்புதலே:

☐ யோபுவின் வாழ்வால் விளக்கம்:

யோபு 6:24 ... *எதிலே தவறினேன், சொல்லுங்கள்*
10:2 ... *எதனால்? தெரியப்படுத்தும்*
13:23 ... *என் பாவத்தை எனக்கு உணர்த்தும்*

☐ தீர்க்கன் எரேமியா மூலம் கடவுளின் அழைப்பு:

எரே 30:15 ... *கூக்குரல் ஏன்? ... உன் அக்கிரமங்கள் ...*

:10ஆ ... *திரும்பு ... அமர்ந்து சுகித்திரு ...*

☐ முறையிடுவானேன்? ஆராய்ந்துபார்த்து மனந்திரும்புங்கள்!

புல 3:39-41 ... *சோதித்து ... ஆராய்ந்து ... திரும்பி ...*

☐ தாவீதின் அனுபவம்:

சங் 39:9,10 ... *நான் மவுனமாயிருந்தேன்*

:8 ... *என் மீறுதல்கள்*

மனந்திரும்புதல் ஆழமாய் இருக்குமானால்,
சிட்சிப்பதில் வேறே பெரிய நோக்கம் கடவுளுக்கு இல்லையேல்,
பொதுவாக அவர் அத்துன்பத்தை நீக்கிவிடுவார் —

நியாயாதிபதிகளின் காலத்து எடுத்துக்காட்டு :

நியா 10:15,16 ... *இஸ்ரவேலின் வருத்தம் பார்த்து மனதுருகினார்*

**(ஆ)** சிட்சைக்கு இன்னொரு காரணம்
நம்மில் பரிசுத்தத்தை வளர்ப்பதாகும்—

☐ இதுவும் யோபுவின் வாழ்வால் எடுத்துக்காட்டு:

அவனில் கொடிய பாவம் எதுவுமில்லை —
யோபு 1:1

சிட்சையோ அவனை இன்னும் தூய்மையாக்கிற்று—

யோபு 42:5,6 ... *காதுகள் ... கண்கள் ... மனந்திரும்புகிறேன்.*

☐ ஏற்கனவே நாம் *''பரிசுத்த'' சகோதரர்தான்* (எபி 3:1).
இப்பொழுது இன்னுமதிகமாய் அவரது பரிசுத்தத்தில் பங்கு —
எபி 12:10

இன்பங்களைவிடத் துன்பங்களே நம்மைக் கடவுளுக்கு
நெருக்கமாய்க் கொண்டுவருகின்றன!

☐ பாடுகளின் மூலமே இயேசு ''பூரணமாக்கப்பட்டார்''—
எபி 5:7-9

இது பாவநிலையிலிருந்து பரிசுத்தத்திற்கு அல்ல;
அவர் பரிசோதிக்கப்பட்டு பூரணரென நிரூபிக்கப்பட்டார்!

- சிட்சையைக் குறித்த இன்னொரு காரியம்:
  நம்மைச் சிட்சிப்பதில் கடவுள் ''நியாயமுள்ளவராய்'' இருக்கிறார் —

  நெகே 9:33 ... *நீதியுள்ளவர் ... உண்மையாய் நடப்பித்தீர்*
  மீகா 7:9 ... *அவரது கோபம் ... அவரது நீதி*

  எனவே,

  ☐ ஒருபோதும் அவரது அன்பைச் சந்தேகிக்காதீர் —

  ஏசா 63:9 ... *அவர்களது நெருக்கத்தில் அவருக்கு நெருக்கம்.*
  பிள்ளைகள் பாடுபட்டால் தந்தை மகிழுவானோ?
  சங் 119:75,76 ... *உபத்திரவமும் அவரது உண்மையின்படியே*
  புல 3:1-23,31-33 ... *அவரது இரக்கங்கள் ...*
  *அவர் மனமார வருத்துவதில்லை*
  சங் 30:5 ... *''நொடிப்பொழுதுதான் கோபம்''*
  ''இரவில் அழுகை'' — இரவு எதுவரை?
  :11அ ... *புலம்பல் ... ஆனந்தக் களிப்பு*

  ''யோபுவின் சரிதை படிப்பிக்கும் நீதி என்ன?''
  இக்கேள்விக்கு நமது பதில்: யாக் 5:11
  *''கர்த்தர் மிகுந்த உருக்கம், இரக்கம் உள்ளவர்''*

- எனவேதான் திருமறை கூறுவதாவது:
  *தேவனால் கண்டித்துத் திருத்தப்படுகிறவன் பாக்கியவான் —*
  யோபு 5:17 ... ***எனவே,*** *கடவுளின் சிட்சையை அவமதியாதே*
  :18 ... *காயப்படுத்துவதும் காயங்கட்டுவதும் அவரே*

  அவர் யேகோவா-மாக்கே (எசேக் 7:9) மட்டுமல்ல —
  *''அடிக்கிற கர்த்தர்''* (Jehovah-Makkeh);
  அதே வேளையில் யேகோவா-ரப்பா (யாத் 15:26) —
  *''குணமாக்குகிற கர்த்தர்''* (Jehovah-Rapha).

  ''அடிக்கிற கைதான் அணைக்கும்!''

உபா 32:39 ... *கொல்லுகிறேன் ... உயிர்ப்பிக்கிறேன் ...*
*காயப்படுத்துகிறேன் ... குணமாக்குகிறேன்*
அல்லேலூயா!

## ■ கூடுதல் சிந்தனைகள்

- ☐ பிறரது துன்பங்களில் நாம் எவ்விதம் ஈடுபடுகிறோம் என்பதை நம்மை உணர வைப்பதும் சிட்சைகள்தான் —
  யோபு இதில் தேறினான் (யோபு 42:7-10)
- ☐ நடைமுறையில் தாழ்மையைக் கற்பிப்பதும் சிட்சைகளே —
  மனாசே இராஜா (2 நாளா 33:12,13)
  எசேக்கியா இராஜா ... *கவனமாய் நடப்பேன்* (ஏசா 38:15)
- ☐ சிட்சைகள் முடிவாக நம்மை
  *இரட்சிப்பின் ஊற்றுகளில் மகிழச்செய்யும்* (ஏசா 12:1-3)

■ சகோதரி சாராள் நவரோஜியின் (1938-2014) பாடல்:

*தேவ சித்தம் நிறைவேற எனையும் ஒப்படைக்கிறேன்;*
*தேவ சத்தம் என்னுள்ளம் பலமாகத் தொனிக்குதே!*

*சோதனையைச் சகிப்பவனே*
*சாந்தமும் பொறுமையும் உள்ளவனே;*
*ஜீவக் கிரீடம் பெற்றிடுவான்,*
*ஜோதியாய்ப் பிரகாசிப்பான்!*

## 5. மனிதருக்குப் பயந்து சாகக்கூடாது.
Do not be afraid of men.

■ பிரபலமானதொரு திருவசனம்:

நீதி 16:7 ... *ஒருவனது வழிகள் கர்த்தருக்குப்*
*பிரியமாயிருந்தால், அவர் அவனது எதிரிகள்கூட*
*அவனோடு சமாதானமாயிருக்கச் செய்வார்.*

அப்படியானால், நீதிமானுக்கு எதிரிகளே இருக்கமாட்டார்
என்பது இங்கு பொருளல்ல.

இதன் பொருள் என்னவெனில்,
நல்ல மனிதன் பிறர்க்குத் தீங்கிழைக்கமாட்டான்;
எனவே பொதுவாகவே அவன் பிறரால் விரும்பப்படுவான்.

ஆனால் எதிரிகளால் சித்திரவதை செய்யப்பட்ட தேவ மனிதரின்
சரிதைகளால் பைபிள் நிரம்பியிருக்கிறது —

☐ யோசேப்பு ஒரு பயபக்தியுள்ள வாலிபன்;
ஆனால் ஆதி 49:22,23 ... *வில்வீரர் ... தொல்லை ... அம்பு ... பகை*

☐ தாவீது இறைவனது இதயத்திற்கு இதமானவன்;
ஆனால் சங் 3:1,2 ... *அநேகர் எனக்கு விரோதமாய் ...*

*அவனோ கர்த்தரிடம் கதறிவிட்டுப்*
*படுக்கைக்குச் சென்றுவிட்டான்!* (வச 4,5)

அப்படியே, சங் 7:1,2 ... *என்னைச் சிங்கம்போலப் பீறி ... கிழித்து—*
முன்னொரு நாள் சிங்கத்தின் வாயைக் கிழித்தவன் தாவீது;
இப்போதோ அவனது எதிரிகள் அவனைக் கிழிக்கின்றனர்!

*தான் வெட்டிய குழியிலேயே துன்மார்க்கன் விழுவான்*
என்ற நிச்சயம் தாவீதுக்கிருந்தது (வச 15).

சங் 13:1,2 ... *கர்த்தாவே, எது வரை ... எது வரை ... எது வரை?*

சங் 23இலும் ... *"சத்துருக்களுக்குமுன் ஒரு பந்தி"*

சங் 22:19-21 ... *ரவுடிகள்:* நாய்கள் (வெறி, கடி);

*சிங்கம்* (கர்ஜனை); *காட்டெருமை* (கொம்புகள்)

☐ இயேசு எல்லாவற்றிலும் பிதாவைப் பிரியப்படுத்தினார்.

அவரில் பாவமோ குற்றமோ கிடையாது.

*நன்மை செய்கிறவராகவே சுற்றித்திரிந்தார்.*

ஆனாலும், அவரது எதிரிகள் அவரைப் பகைத்தனர்,

வதைத்தனர், முடிவில் கொன்றனர் அல்லவா?

☐ அப்போஸ்தலர்

1 கொரி 16:9 ... *"அநேக" விரோதிகள்*

2 கொரி 6:8 ... *"தூற்றுவோர் ... இகழுவோர்"*

2 கொரி 11:26 ... *"சொந்த மக்கள் ... கள்ளச் சகோதரர்"*

3 யோ 9,10 ... *தியோத்திரேப்பு ... பொல்லாத பிதற்றல்*

எனவே, தங்களுக்கெதிராய்ச் சத்துருக்கள் இருக்கிறார்களென

தேவப்பிள்ளைகள் ஆச்சரியப்படக்கூடாது.

அவர்கள் வெளிப்படையாய் அல்லது மறைமுகமாய் எதிர்ப்பர்.

■ மனித பயத்திலிருந்து விடுவிக்கப்படுவது எப்படி?

☐ நீதி 29:25 ... *மனித பயம்: கண்ணி* (snare)

*தேவ பயம்: பாதுகாப்பு* (security)

ஆஸ்வால்டு சேம்பர்ஸ் (1874-1917):

கடவுளுக்குப் பயந்தால், எதற்கும் பயப்படமாட்டீர்;

கடவுளுக்குப் பயப்படாவிடில், எதற்கும் பயப்படுவீர்!

இதுவே இயேசுவின் போதனை:

லூக் 12:4,5 ... *உடலைக் கொல்லுவர் ... நரகில் தள்ளமுடியாது*

கீழ்க்கண்ட வசனங்களையும் பாருங்கள் —

ஏசா 51:7 ... *பயப்படாதிருங்கள்*

:12 ... *மடியும் ... புல்லென மாயும் மனிதன்*

— வேதத்தில் திரும்பத் திரும்ப வரும் ஒரு சத்தியம்:

*"மனிதன் எனக்கு என்ன செய்வான்?"*

☐ சங் 27:1-3 ... *யாருக்குப் பயப்படுவேன்?*

☐ சங் 56:4,11 ... *அற்ப மனிதன் எனக்கு என்ன செய்யமுடியும்?* (2)

☐ சங் 118:6 ... *மனிதன் எனக்கு என்ன செய்வான்?*

இச்சத்தியம் புதிய ஏற்பாட்டிற்குள்ளும் வந்துள்ளது—

☐ ரோ 8:31 ... *கடவுள் நமக்காயிருந்தால் ... யார் எதிராக முடியும்?*

இவ்வசனப்பகுதிகளின் முடிவு:

☐ எபி 13:6 ... *எனவே நாம் **தைரியமாய்ச்** சொல்லக்கூடியது:*

*கர்த்தர் எனக்குச் சகாயர்; நான் பயப்படேன்!*

*"**யார்**" நமக்கு எதிராய் நிற்கமுடியும்?*

*யார் "**நமக்கு**" எதிராய் நிற்கமுடியும்?*

*யார் நமக்கு "**எதிராய்**" நிற்கமுடியும்?*

*யார் நமக்கு எதிராய் "**நிற்கமுடியும்?**"*

■ எதிரிகளிடம் எப்படி நடந்துகொள்வது:

அ) குற்றம் சாட்டப்பட்டால் உங்களைச் சோதித்தறியுங்கள். காரியங்களைச் சரிசெய்து, தொடர்ந்து முன்செல்லுங்கள்.

நமது பாதையை நேராக்க, சமமாக்க, எதிரிகளைக் கடவுள் பயன்படுத்துகிறார்:

சங் 27:11 ... *எதிரிகளை முன்னிட்டு ... செவ்வையான பாதை*

ஆ) கடவுளது கரங்களில் சாய்ந்துவிடுங்கள்.

☐ தாவீது ... சீமேயி

2 சாமு 16:6 ... *கல்லெறிந்தான்*

:7 ... *சபித்தான்*

:11ஆ,12 ... *ஒரு வேளை கர்த்தர் ...*

☐ தாவீது ... அமலேக்கியர் ... சுட்டெரிப்பு ... சிறைப்பிடிப்பு ...

1 சாமு 30:6 ... *கல்லெறிய ... தன்னைத் திடப்படுத்தி ...*

☐ எரேமியா ... ஆசாரியரும் மக்களும் ...

எரே 26:11,14 ... *எது வேண்டுமானாலும் செய்யுங்கள் ...*

பதட்டமில்லை!

இ) அர்த்தமற்ற அவதூறுகளையும்

தூண்டிவிடப்பட்ட தூற்றல்களையும் கவனியாதீர்:

☐ தாவீது: சங் 38:13-15 ... *செவிடனும் ஊமையனும் போல ...*

☐ இயேசு: மத் 27:11 ... பிலாத்துவுக்குப் பதிலுரைத்தார்

:12 ... ஆசாரியருக்குப் பதிலுரைக்கவில்லை

(பரத்திலிருந்து வந்த ஞானம்)

ஈ) மனித பயத்தினால் நம்மைப் பிசாசு முடமாக்க முயலுவான்;
உங்கள் வேலையிலிருந்து திசை திரும்பாதீர்.

☐ நெகேமியா

ஐந்து முயற்சிகள்: ஒரு திறந்த கடிதமும் சேர்த்து!

நெகே 6:3-5 ... ஒரே பதில்:

*''நான் இறங்கிவரக்கூடாது!''*

"*I cannot come down!*"

எதிரிகளின் நோக்கம்: வேலையை நிறுத்துவது (வச 9).

தேவ ஊழியன் ஒவ்வொருவருக்கும்

ஒரு சன்பல்லாத்தும் ஒரு தொபியாவும் இருப்பர்!

அவர்களுக்குப் பயப்படாதீர்;

கடவுள் தந்த வேலையையே செய்துகொண்டு

முன்சென்றுகொண்டேயிருங்கள்.

## ■ கூடுதல் குறிப்புகள்

☐ முட்டாளுக்குப் பதில்கொடு ... பதில் கொடாதே (நீதி 26:4,5)

☐ ஒரு தீர்க்கனே உங்களைச் சபித்தாலும் ... (உபா 23:5)

☐ *கண்ணி வைத்திருக்கிறார்கள் ... நானோ பாடுவேன்* (சங் 57:6-8)

☐ மந்திரவாதம், சூனியம் (எண் 23:23)

☐ சத்ருவாய் மாறிய மித்ரு (சங் 41:9)

## 6. சுய பரிதாபத்தில் அமிழ்ந்துவிடக்கூடாது.
Do not sink in self-pity.

- நமது வாழ்வில் துக்கம் வராது தடுக்க முடியாது;
  சுய பரிதாபமோ நமது தெரிந்தெடுப்பு.

துக்கங்கள் நம்மைக் கசக்கிப் பிழியும்போது,
நாம் நம்மிடம் சொல்லிக்கொள்ளவேண்டியது—
சங் 42:5,11 ... 43:5 ... } *என் ஆத்துமாவே, ஏன் கலங்குகிறாய்?*
*தேவனில் நம்பிக்கையாயிரு!* (மும்முறை)

அதாவது, கடவுள் அரியணையில்தான் வீற்றிருக்கிறார்!

தூசியை உதறிவிட்டு வெளிவரவேண்டியது ''நமது'' பொறுப்பு—
ஏசா 52:2 ... (நீயே) *உதறிவிட்டு எழுந்திரு!*
(நீயே) *உன்னை அவிழ்த்துவிடு!*

இருட்டிலிருந்து வெளிவருவதும் அவ்வண்ணமே—
ஏசா 60:1 ... (நீயே) *எழும்பிப் பிரகாசி!*
எபே 5:14 ... (நீயே) *விழித்து எழுந்திரு!*

- ஆறுதலடைய மறுத்துவிடாதிருங்கள்—
  ராமாவில் ராகேல் (எரே 31:15)
  யோசேப்பிற்காய் யாக்கோபு (ஆதி 37:35)
  தனது குழந்தைக்காய்த் தாவீது (2 சாமு 12:17)

எரேமியாவின் சாட்சியோ பிரகாசமாயிருக்கிறது —
எரே 8:18 ... அவன் துக்கங்களின் தீர்க்கனாயிருந்தும்!
*... என் சஞ்சலத்தில் ஆறுதலடையப் பார்க்கிறேன் ...*

- களிகூருவது, மகிழுவது, இதெல்லாம் ''நமது'' பொறுப்பு—
  பிலி 3:1;4:4 ... *மகிழ்ந்திருங்கள் ... மறுபடியும் சொல்கிறேன்*
  இந்நிருபத்தில் இது திரும்பத் திரும்ப வருகிறது.

மகிழ்வடைய உங்களால் முடிந்ததெல்லாம் செய்யுங்கள்—

நீதி 15:13 ... *மன மலர்ச்சி ... முக மலர்ச்சி*

வாய் விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகுமாம்!

- சுய பரிதாபிகள் தங்களைப் பார்த்துப் பரிதபியாதோரிடம் குற்றங்காண்பர்.

ஆனால் நாம் மறக்கக்கூடாதவை—

- ☐ ஒவ்வொருவருக்கும் அவரவர் பிரச்னைகள் உண்டு
  1 பேது 5:9 ... *அதே பாடுகள் ... உங்கள் சகோதரர்க்கு ...*
- ☐ பல வேளைகளில் அவர்கள் பாடுகள் நமதைவிட மோசம்
  லூக் 23:27,28 ... *உங்கள் பிள்ளைகள் ... கொடிய நாட்கள்*
- ☐ நமது துக்கங்கள் எவருக்கும் முழுமையாய்ப் புரியாது
  நீதி 14:10 ... *இதயத்தின் கசப்பு ... ஆனால் அந்நியன்*
- ☐ பிறரது பாடுகளைப் பார்த்துப் பரிதபிப்போரைவிட மகிழ்வோரே அதிகம்!
  நீதி 25:20 ... வெந்த புண்ணில் வேல்!
- ☐ மக்களிடமிருந்து அதிகம் எதிர்பார்க்காதீர்.
  எதிர்பார்ப்பில்லையேல் ஏமாற்றமுமில்லை—
  சங் 69:20,21 ... *கனி ரசமல்ல ... கசந்த காடி*

- சுயபரிதாபத்தை மேற்கொள்ள ஒரே வழி பிறரது துன்பங்களில் பரிதபிப்பதும் பங்கேற்பதும்தான்—

(உ-ம்) இயேசு — வேதனையிலும் பிறர்க்கு நன்மை செய்தார் —
அ) செத்துக்கொண்டிருந்த திருடன் — இயேசு பெற்ற அநீதியான தண்டனைக்காய்ப் பரிதபித்தவன் (லூக் 23:39-41)
ஆ) அழுதுகொண்டு நின்ற அம்மா (யோ 19:25)

- நீங்கள் பாடனுபவிக்கும்போது,
  சுயபரிதாபத்தில் மூழ்கிவிடுவதற்குப் பதிலாக,
  இதுபோல் பிறர் பாடுபடக்கூடாதென்று வேண்டுங்கள் —

(உ-ம்) தாவீது: சங் 35:12...அவனது சொந்த துக்கம்
:13,14 ... ஒரு நண்பனாய், சகோதரனாய்,
தாயாய்ப் பிறருக்காய்ப் புலம்பல்

■ பிறரைக் குறித்த கரிசனையற்றிருப்பீர்களானால்,
பிறர் துன்பத்தில் இன்பம் காணுபவராகிவிடுவீர் (saddist) —
அதாவது, நம்மைப்போல் பிறரும் துன்புற விருப்பம்.

அப்போஸ்தலரோ —

☐ எப்பாபிராதீத்து தனது வியாதி மற்றவர்களைத் துக்கிக்கச் செய்துவிட்டதே என வியாகுலமடைந்தான்! (பிலி 2:25,26)

☐ பிறரை மகிழ்வித்ததால் பவுலின் துக்கம் குறைந்தது! (வச 28)
யாரையும் துக்கப்படுத்திவிடக்கூடாதெனப்
பவுல் எவ்வளவு கவனமாயிருந்தான், பாருங்கள்—
2 கொரி 2:1-3 ... *துக்கப்படுத்தக்கூடாதென்று* ***தீர்மானம்***

■ ஆன்மீகத் தசைகளைச் சுயபரிதாபம் வலுவிழக்கச்செய்யும்.
எனவேதான், சிட்சையைப் பற்றிய அத்தியாயத்தில்,
எபிரெயர் நிருப ஆக்கியோன் இப்படிச் சொல்லுகிறான் —

*''தளர்ந்த கைகள், தள்ளாடும் முழங்கால்கள்,*
*ஊனமுற்ற பாதங்களைப் பலப்படுத்துங்கள்''* (எபி 12:11-13)

■ அழுதுகொண்டே இராதீர்! வெளியே வாருங்கள்!
கடவுள்: ''சாமுவேலே, ஏன் சவுலுக்காய்த் துக்கித்துக்கொண்டே
இருக்கிறாய்? புறப்பட்டுப்போய்த் தாவீதை அபிஷேகம்பண்ணு!''
(1 சாமு 15:11,35;16:1)

■ **கூடுதல் கருத்துக்கள்**

☐ பாவவுணர்வினாலான துக்கமானால்,
அறிக்கையிட்டுவிட்டு, எழுந்து வாருங்கள் —
தீர்ப்புணர்வில் நீடிக்காதிருங்கள் — நெகே 8:9-11 / 1 யோ 4:4,7,9

☐ நாளையத் துன்பங்களைக் கவலை நீக்காது;
மாறாக, இன்றையத் திறனைத் திருடிவிடும்.

## 7. பக்தி முயற்சிகளில் தளரக்கூடாது.
Do not slacken spiritual exercises.

■ துக்கம் மேலும் மேலும் நம்மையழுத்தும்போது,
ஜெபித்துப் பயனென்ன ...
வேதத்தைத் தியானித்துப் பயனென்ன ...
பக்திமுயற்சிகளெல்லாம் எதற்கு ...
எனும் கேள்விகள் மனதில் எழுகின்றன.

இவ்விதச் சிந்தைக்கு நாம் இசைந்துவிட்டால்,
நீந்திக் கரையேறாது, துக்கத்திலேயே மூழ்கிவிடுவோம்.

■ என்ன வந்தாலும் தொடர்ந்து செய்துகொண்டிருக்கவேண்டிய
4 பக்தி முயற்சிகளைப் பார்ப்போம்—

### (அ) திருமறைத் தியானம்

சங்கீதம் 119 முழுவதும் ''திருவசனம்'' என்ற பொருளையே
தழுவியது என்றறிவோம்—
மட்டுமல்ல, இது பெரும்பாலும் துன்ப துக்கங்களைச் சார்ந்தது—

| | |
|---|---|
| வச 19 ... தனிமை | வச 51...கேலி (ஏளனம்) |
| வச 22 ... நிந்தை | வச 69,78,86... பொய்க் குற்றச்சாட்டு |
| வச 23,161 ...கொடிய தலைவர் | வச 85,95 ... சதித் திட்டம் |
| வச 25 ... தரைமட்டமாக்கும் அனுபவங்கள் | வச 141 ... அசட்டை |
| வச 28 ... அழுத்தம் | வச 143 ... இக்கட்டு, நெருக்கம் |

முடிவென்ன? *''உமது வேதம் எனது மகிழ்வாயிராதிருந்தால்''* (வச 92)
திருவசனத்தினால் ஆறுதல் (வச 50,52)
பு.ஏ. — *வேத வசனத்தின் மூலம் ஆறுதல்* (ரோ 15:4)

நமது இதயங்கள் துக்கத்தினால், பாரத்தினால் கரையும்போது,
திருவசனமே நம்மை மகிழ்வாக்கித் தூக்குகிறது —
சங் 19:8 ... *இதயத்தை மகிழ்விக்கிறது.*

பைபிள் வாசிக்க விருப்பமில்லாதிருக்கும்போதும்,
வாசித்துக்கொண்டேயிருங்கள்.
உங்கள் கண்ணீர்களினூடே இறையன்பின் வானவில் தெரியும்.

### (ஆ) ஜெபமும் துதியும்

பாடு என்றவுடன் நாம் செய்யும்படித் திருமறை போதிப்பது ஜெபமே:
யாக் 5:13

☐ குழந்தையின்மையினால் அன்னாள் தனது ஆன்மாவில்
*''கசப்புற்றிருந்தாள்''*
ஆனால் ஜெபித்தாள் (1 சாமு 1:10,15)

☐ எசேக்கியா ''முதலாவது'' *ஜெபித்தான்,*
அடுத்துதான் *''அழுதான்''* — (ஏசா 38:2-5)

☐ யாபேஸ் (அவனது பெயரின் பொருளே ''வேதனை''தான்) —
ஜெபித்தான், பதில் பெற்றான் (1 நாளா 4:9,10)

☐ *இயேசு ... பலத்த சத்தம் ... கண்ணீர் ... விண்ணப்பம்* (எபி 5:7)

அவர் சிலுவையினின்று விடுவிக்கப்படவில்லை;
சிலுவையைச் சகிக்கக் கடவுள் அவரைப் பலப்படுத்தினர்!

— இக்கட்டு வேளைகளில் ஆண்டவரைக் கூப்பிடும்படி
வேதம் அடிக்கடி நம்மை அறிவுறுத்துகிறது.
சங் 50:15 ... *கூப்பிடு ... விடுவிப்பேன்*

— விவரிக்க முடியா சமாதானம்:
பிலி 4:6,7 ... *ஸ்தோத்திரம் ... ஜெபம் ... சமாதானம்*
பிரச்னைக்குத் தீர்வு கிடைக்கிறதோ இல்லையோ!
இல்லையேல் பிசாசு உங்களை விழுங்கிவிடுவான் (1 பேது 5:7,8)

— ஜெபம் மட்டுமல்ல, ஸ்தோத்திரமும்:
*''ஏன் கலங்குகிறாய்?...* ***இன்னும்*** *துதிப்பேன்!''*

சங் 42:5,11 ... *இரட்சிப்பினிமித்தம் ...*
43:5 ... *இரட்சிப்பாயிருக்கிறவரை ...*

— நீதிமான் பாடி மகிழுகிறான் ...
நீதி 29:6ஆ ... பாடல் புத்தகங்களின் பயன்பாடு

உடனடி விடுதலை வராவிடில் விட்டுவிடாதீர்;
கூப்பிட்டுக்கொண்டு, பொறுமையாய்க் காத்திருங்கள் ...
சங் 40:1-3 ... *பயங்கர குழி ... உளையான சேறு*

துதிப்பதாலேயே *''அழுகையின் பள்ளத்தாக்கு''*
*''ஆசீர்வாத நீரூற்றாய்''* மாறுகிறது (சங் 84:4,6)
"Baca" ⏩ "Berachah"

### (இ) தேவப் பிள்ளைகளுடன் ஐக்கியம்

■ சில நேரம் தனிமையில் துக்கிப்பது அவசியம் (யோபு 10:20);

ஆனாலும், எவ்வளவு சீக்கிரம் தேவப் பிள்ளைகளின் ஐக்கியத்திற்குள் வருகிறோமோ அவ்வளவு மேல்!

அப்பொழுதுதான் ஒருவராலொருவர் ஊக்குவிக்கப்படுவோம் —
1 தெச 4:18 ... *ஒருவரையொருவர் தேற்றுங்கள்*
5:11 ... *ஒருவரையொருவர் தேற்றுங்கள்*

இதுவே உடலின் தத்துவம்: 1 கொரி 12:26
*... ஓர் உறுப்பு வேதனைப்பட்டால், எல்லா உறுப்புகளும் ...*

— ஐக்கியத்தில் கிடைக்கும் நல்வார்த்தை இதயத்தை மகிழ்விக்கும்
நீதி 12:25 ... *இதயம் ... கவலை ... நல்வார்த்தை*

நம்மை மகிழ்விக்கவே கடவுளது *''ஜெபவீடு!''* ஏசா 56:7

ஐக்கியத்தின் அனலே நாம் உறைந்து சாகாது தடுக்கும்!

### (ஈ) கிறிஸ்தவ சேவை

■ பேரழிவோ, பேரிடரோ நம்மைத் தாக்குகையில்,
திருப்பணியை முழுவதும் நிறுத்திவிடச் சோதனை வரும்.
ஆனால், அது தீர்வல்லவே.

அது நம்மை முடமாக்கப் பிசாசின் யுக்தியே.
துன்ப துக்கங்களின் நடுவிலும் திருப்பணியைத் தொடர்ந்த பலரது எடுத்துக்காட்டுகள் பைபிளில் உண்டு —

☐ யோசேப்பு — அவனே ஒரு சிறைக்கைதி;
ஆனாலும் உடன் கைதிகளுக்குப் பணியாற்றினான்.
ஆதி 40:6-8 ... மது பரிமாறுவோன் ... அப்பம் தயாரிப்போன் ...
*"உங்கள் முகங்கள் வாடியிருப்பதேன்?"*

☐ யோபு — அவனது நிலையே பரிதாபம்;
ஆனாலும் நண்பருக்காய் வேண்டினான்.
யோபு 42:10 ... பிறர்க்குப் பணியாற்றுவது நமக்கு விடுதலை கொணரலாம்!

☐ இயேசு — தமது மரணத்திற்காய் ஆயத்தப்படுகையில்தான் தமது சீடருக்காய் ஜெபித்தார் (யோ 17)

☐ சகரியா & எலிசபெத் — பல்லாண்டுகள் பிள்ளைப்பேறின்மை.
துக்கமிருந்தாலும் பணி தொடர்ந்தனர் (லூக் 1:7,8,13)

☐ இயேசு — யோவானின் படுகொலை — தனிமை —
ஆனால் சீக்கிரம் பணியைத் தொடர்ந்தார் (மத் 14:12-14).
சிலுவையிலும், ஒருவனை ஆதாயம் செய்தார்.

☐ ஏமி கார்மைக்கல் — பல்லாண்டு படுத்த படுக்கை —
அவர்களது மிகச் சிறந்த பாடல்கள் உருவான வேளை!

☐ ஜோனி எரிக்சன் — நீச்சல் விபத்தில் செயலிழப்பு —
வாழ்வே சக்கர நாற்காலியில்தான் —

இவ்விதம் அவதியுறும் ஆயிரங்களுக்கு
சக்கர நாற்காலிகள் வழங்கி உதவுகிறார்.

☐ நான் கண்டது:
ஊழியத்தை நிறுத்தினவர் இன்னும் அமிழ்ந்தனர்;
மற்றவரோ துக்கங்கள்மேல் நீந்திச் சென்றனர்!

ஆம், *கண்ணீருடன் விதைப்பு, களிப்புடன் அறுப்பு* (சங் 126:5,6)

- **கூடுதல் சிந்தனைகள்**
  - ☐ *சாக்குத் துணிக்குப் பதிலாய்த் துதியின் ஆடை* (ஏசா 61:3)
  - ☐ *தூயகத்திற்குள்* நுழையும்வரை ... (சங் 73:14,16,17)
  - ☐ ஜெபங்களுக்குக் கதவடைப்பு (?) ... (புல 3:7,8,44)
- Joseph Scriven (1819-1886) என்பவரின் பாடல்:

*"What a friend we have in Jesus!"*

*கஷ்ட நஷ்டம் உண்டானாலும்*
*இயேசுவண்டை சேருவோம்;*
*மோச நாசம் நேரிட்டாலும்*
*ஜெப தூபம் காட்டுவோம்.*

*ஒப்பில்லாத பிராண நேசா!*
*உம்மை நம்பி நேசிப்போம்;*
*அளவற்ற அருள் நாதா!*
*உம்மை நோக்கிக் கெஞ்சுவோம்.*

(பார்க்க: பக்கங்கள் 68-70, 259-262, 385-388, 651-656, 735-737)

## 8. தீரா பிரச்னைகளால் திகைக்கக்கூடாது.

Do not be puzzled by unsolved problems.

- இயேசுவிடம் வருவதே பிரச்னைகளின் ''முடிவு'' என்றொரு தவறான உபதேசம் எங்கும் நிலவி வருகிறது. உண்மையென்னவெனில், இயேசுவைப் பின்பற்றத் துவங்குவதுதான் நமது பிரச்னைகளின் ''துவக்கம்!''

  இன்னொரு சத்தியம் :

  நமது பிரச்னைகளில் **''சிலவற்றைக்''** கடவுள் தீர்க்கிறார்;
  **''பெரும்பாலானவற்றையோ''** அப்படியே விட்டுவிடுகிறார்.
  சில பிரச்னைகளோடு **வாழ்ந்தே** ஆகவேண்டும்.

- நீடித்த பிரச்னைகளுடன் வாழ்ந்த சில தேவ மனிதரைப் பைபிளில் காண்போம் —

  அ) திருப்பாடகன் தாவீது

  சங் 13:1,2 ... *''எதுவரை?''* ... 4 முறை
  அனுதின அவதி ...
  விசுவாசித்து, துதித்து, மேற்கொண்டான் —
  வச 5,6 ... *நம்பி ... களிகூர்ந்து ...*
  *''இரட்சிப்பையே''* அதிவுன்னத ஈவாய்க் கண்டான்.

  ஆ) திருத்தூதுவன் பவுல்

  2 கொரி 12:7-9 ... *முள் ... மும்முறை ... கிருபை*
  தீர்வு: கடவுளது *''கிருபை, பலம்''* மூலம்
  பலவீனங்களிலும் *''அகமகிழ்வு''*

- ஒருபோதும் தீராத இன்னொரு பாடு —

  ''நீதியாய்'' வாழ்வதால் துன்பம் (பிரசங்கமல்ல, வாழ்வு)
  மத் 5:10 ... *விண்ணகத்தில்தான்* விடிவு காலம்!
  1 பேது 2:19,20 ... *உபத்திரவம் ... கடவுளுக்கு உகந்தது ...*

- தீரா பிரச்னைகள் நமது குணநலன் மேம்பாட்டிற்கே —

  ரோ 5:3,4 ... *உபத்திரவம் ... பொறுமை ... எதிர்நோக்கு*

  யாக் 1:2-4 ... *பலவித சோதனைகள் ... பொறுமை ... பூரணம்*

  ''இஸ்ரவேலின்'' 12 கோத்திரங்களுக்கு ... (வச 1)

இஸ்ரவேலரின் சரிதை இதை தெள்ளத்தெளிவாக்குகிறது —

அ) பாலைவனப் பயணம்

யாத் 13:17,18 ... நாம் எளிதில் பின்வாங்காதிருக்க (சுற்று வழி)

உபா 8:2 ... (ஏன் 40 ஆண்டுகள்?) ... *தாழ்மை ... பரிசோதிப்பு*

9:7 ... நாம் பொதுவாக முரட்டாட்டமுள்ளவர்களே —

அவ்வளவு எளிதில் மாறமாட்டோம்!

எந்தக் குணநலனும் உடனடியாய் வளர்ந்துவிடாது.

சிப்பிக்குள்ளிருக்கும் தொடர்ந்த உறுத்துதலே

முத்தை உருவாக்க உதவுகிறது!

ஆ) கானானைக் கைப்பற்றுதல்

ஏன் ஒரு சில நாடுகளைத் தேவன் விட்டுவைத்தார்? —

நியா 3:1-4 ... *போருக்குப் பழக்கவும் பரிசோதிக்கவும் ...*

நமது வாழ்விலும் சில போராட்டங்கள்

ஓயாததற்குக் காரணம் இதுவாயிருக்கலாம்.

சங் 144:1 ... *கரங்களுக்கும் விரல்களுக்கும் பயிற்சி*

இப்பயணத்தில், இப்போராட்டத்தில், நாம் தனியே இல்லை —

*''தேற்றரவாளன்''* ***எப்போதும்*** *நம்மோடு* (யோ 14:16)

**நிரந்தர** உதவி நமக்குத் தேவை என்பது இங்கு தெளிவு.

- தீரா பிரச்னைகள் மேலான ஆசீர்வாதங்களுக்கு வழிவகுக்கலாம் —

  ☐ ஒரு வேளை உங்களுக்குக் குழந்தை பாக்கியம் இல்லை;

  அதற்குச் சாத்தியமும் இல்லாதிருக்கலாம் —

பெற்றோரில்லா குழந்தை ஒன்றை நீங்கள் ''தத்தெடுக்க''
இதுவே கடவுளின் குரலாயிருக்கலாம்!

பிள்ளையில்லாத் தம்பதியரைவிடப்
பெற்றோரில்லா பிள்ளைகளே அதிகம்.

நமது தேவன் *திக்கற்ற பிள்ளைகளின் தேவன்* —
ஒரு பிள்ளையை நீங்கள் தத்தெடுப்பதால்
கடவுளது முகத்தில் புன்முறுவல் கொண்டுவருகிறீர்கள்!

பின்னர் உங்களுக்கே ஒரு குழந்தை பிறந்தால்,
அது இரட்டிப்பான ஆசீர்வாதம்தானே?

நாமெல்லாருமே கடவுளுக்குத் ''தத்துப்'' பிள்ளைகள்தானே?
ரோ 8:15

☐ நமது **பொருத்தனைகளை** நினைத்து,
நிறைவேற்றவும் துன்பக்காலங்கள் ஒரு வாய்ப்பாகின்றன —

சங் 66:13,14 ... இக்கட்டில் பொருத்தனை
132:1-5 ... *''தாவீதையும்'' அவனது உபத்திரவத்தையும் நினைத்தருளும் ...*

■ இன்றையப் பிரச்னைகளையே சிந்தித்துக்கொண்டிராது,
முந்திய ஆசீர்வாதங்களை நினைவுபடுத்துங்கள்!

மெதடிஸ்ட் சபையில் உபதேசியாராயிருந்த
Johnson Oatman (1856-1922) என்பவரது பாடல்:
*(Count your blessings...)*

*துன்பம் உன்னைச் சூழ்ந்தலைக் கழித்தாலும்,*
*இன்பம் இழந்தேன் என்றெண்ணிச் சோர்ந்தாலும்,*
*எண்ணிப்பார் —நீ பெற்ற பேராசீர்வாதம்;*
*கர்த்தர் செய்த யாவும் வியப்பைத் தரும்!*

*எண்ணிப்பார் நீ பெற்ற பாக்கியங்கள்;*
*கர்த்தர் செய்த நன்மைகள் யாவும்;*
*ஆசீர்வாதம்! எண்ணு ஒவ்வொன்றாய்;*
*கர்த்தர் செய்த யாவும் வியப்பைத் தரும்!*

தீராத பிரச்னைகளை மனதில் வைத்தே இப்பாடல் எழுதப்பட்டதென எண்ணுகிறேன் — அடுத்த கவி —

*கவலை சுமை நீ சுமக்கும் போதும்,*
*சிலுவை உனக்குப் பளுவாகும் போதும்,*
*எண்ணிப்பார் — நீ பெற்ற பேராசீர்வாதம்;*
*கர்த்தர் செய்த யாவும் வியப்பைத் தரும்!*

■ ''ஏன்'' என்ற நமது கேள்விகளுக்குக் கடவுள் பதிலளித்தாலும் நமது குருவி மூளைக்கு அது புரியவா போகிறது?

கர்த்தரை அப்படியே நம்பிச் சார்ந்திடுங்கள்;
பொறுமையோடு ஓடிக்கொண்டேயிருங்கள்!

## 9. தற்கொலை எண்ணத்திற்கே இடங்கொடுக்கக்கூடாது.

Do not ever contemplate suicide.

- துக்கங்கள் நெஞ்சை அடைக்கும்போது,
  அவற்றை எப்படிச் சமாளிக்கவென்று தெரியாதபோது,
  எல்லாவற்றையும் விட்டு ஓடிவிடலாமா என்றே தோன்றுகிறது —
  தற்கொலைதான் முடிவான தீர்வாய்த் தெரிகிறது.
  இவ்வித எண்ணம் எத்தனை வீண் என்று பார்ப்போம்.

- துக்கத்தை மனிதன் மேற்கொள்ள இயலாதபோது,
  மகிழவும், திருப்தியடையவும் எதையெல்லாமோ முயற்சிக்கிறான் —

  - ☐ சொத்துக் குவிப்பு

    இது நிலைமையை இன்னும் மோசமாக்குகிறது.
    1 தீமோ 6:10 ... *''தங்களையே உருவக் குத்துதல்''*
    அதாவது, படிப்படியான தற்கொலை!

    பணம் என்பது கடல் நீர் போன்றது;
    குடிக்கக் குடிக்கத் தாகம்தான்!

  - ☐ களியாட்டம் (கேளிக்கை)

    இதுவும் துக்கத்திலும் வருத்தத்திலுமே முடியும்.
    நீதி 14:13 ... *நகைப்பு ... துக்கம் ... சஞ்சலம்*

  - ☐ மதுபானம்

    இதுவும், ஐயோ, இன்னும் துக்கத்திற்கே நடத்தும்.
    நீதி 23:29-32 ... *விரியனைப்போல் கடிக்கும்*
    அப்படியானால், நீதி 31:6,7இன் பொருள்?
    ... தாங்கமுடியா நிலையில் மருந்து போல் ...

  - ☐ தூக்க மருந்துகளும், தூக்கமும்

    இவைகளும் அதிகம் உதவாது!
    யோபு 7:13-16 ... *படுக்கை ... கழுத்து நெரிப்பு ...*

இவையெல்லாவற்றையும் சாலொமோன் முயற்சித்தான்;

அனைத்தும் மாயை (= பயனற்றவை) என்றே கண்டான்.

பிரசங்கி 2ஐ வாசியுங்கள் —

அவன் முற்சித்தவை ... *''மதுபானம்''* (வச 3) Wine

*''வேலைகள்''* (வச 4-6) Works

*''சொத்து''* (வச 7,8) Wealth

*''பெண்கள்''* (வச 10) Women

முடிவு: வச 17 ... *மாயை ... உயிரை வெறுக்கிறேன் ...*

*காற்றைப் பிடிப்பது போன்றதுதான் ...*

■ நமது நாட்டில் இது அப்படியே நடக்கிறது —

(உ-ம்) பெங்களூருதான் இந்தியாவின் தோட்ட நகர்,

மின்னியல் நகர் என்றாலும் இதுதான் தற்கொலைக்குத் தலைநகர்!

பெண்டிரைவிட ஆடவரே அதிக உல்லாசம் அனுபவிக்கின்றனர்;

ஆனாலும், பெண்டிரைவிட ஆடவர் நடுவில்தான் தற்கொலை அதிகம்!

அதுவும் வாழ்வின் மிக முக்கிய வயது வரம்பில் —

தற்கொலை மிக அதிகம் — வயது 15 முதல் 45

அடுத்து — வயது 45 முதல் 60

அடுத்து — வயது 60 +

அடுத்து — வயது 14 வரை

■ வாழ்வை முடித்துக்கொள்ள வரும் சோதனை அசாதாரணமல்ல —

தேவ பக்தியுள்ள மனிதருக்கும் இச்சோதனை இருந்திருக்கிறது —

☐ தீர்க்கன் எலியா (1 இரா 19:3,4) ... *போதும் ... எடுத்துக்கொள்ளும்*

☐ பக்தன் யோபு (யோபு 7:15) ... *நெருக்குண்டு சாக விருப்பம்*

☐ தாவீது (சங் 55:4-6)*...வியாகுலம்...புறா போல சிறகுகள் இருந்தால்!*

■ தற்கொலை ஒருபோதும் கடவுளின் பூரண சித்தமல்ல.

திருமறையில் வரும் தற்கொலையாளிகள் பின்மாற்றக்காரரே —

சிம்சோன் ... சவுலரசன் ... யூதாஸ்

☐ தற்கொலை செய்யத் தூண்டியது ஒரு *பைத்தியக்காரி* —
திருமதி யோபு (யோபு 2:9,10)

☐ தற்கொலை எண்ணம் பிசாசு கொடுப்பது —
மத் 17:15,18 ... *தீயிலும் நீரிலும் தள்ளுதல்*

மிருகங்களைக்கூட பிசாசுகள் தற்கொலைக்குத் தூண்டுகின்றன—
லூக் 8:30,33 ... *லேகியோன் ... பன்றிகள் ... மூழ்கின*

■ **தற்கொலை எண்ணத்தை மேற்கொள்ளுவதெப்படி?**

(அ) பிறர் உதவி நாடுங்கள்.

திடீரென்று தற்கொலை நடந்துவிடுவதில்லை.
கொஞ்சக் காலமாகவே அந்நபரின் மனதில்
அது ஓடிக்கொண்டேயிருந்திருக்கும்.
— முளையிலேயே கிள்ளிவிடவேண்டும்.

நம்பகமான நண்பனொருவனுடன் பகிருங்கள்.
நீதி 12:25 ... *கவலை ... நல்வார்த்தை ... மகிழ்ச்சி*

விஞ்ஞான ரீதியான ஆலோசனை நாடுங்கள் —
ஜெபத்திற்கும் விசுவாசத்திற்கும் மருந்து எதிரானதல்ல;
அப்படியே மனோதத்துவ உதவியும்.
சில குடும்பங்களில் தற்கொலை வம்சாவழியாய் வரும் —
இத்தகைய சூழலிலெல்லாம் மருத்துவ உதவி அத்தியாவசியம்.

பைபிள் சார்ந்தது, சாராதது என ஆலோசனைப்பணியில் இருவகை.
பைபிள் சார்ந்ததில்தான் விசுவாசிகளுக்குக் கூடுதல் பயன்.

(ஆ) கடவுள்மீது நம்பிக்கையைப் புதுப்பித்திடுங்கள்.

☐ திரும்பத் திரும்ப மனதில் எழும் கேள்வி —
*''கடவுள் எங்கே?''*
இக்கேள்வி உள்ளிருந்து வரும் (சங் 22:1)
இக்கேள்வி பிறரிடமிருந்து வரும் (சங் 42:3)
இக்கேள்வி எதிரிகளிடமிருந்து வரும் (சங் 42:10)

☐ இறைவாக்குகளை விசுவாசியுங்கள்.

வெளிச்சத்தில் கடவுள் சொன்னதை இருளில் சந்தேகிக்காதீர்!

*''நான் உன்னைக் கைவிடுவதில்லை''*

ஏசா 49:14-16 ... *கர்த்தர் என்னைக் கைவிட்டார் ...*

*சொந்தத் தாய் ... உள்ளங்கை ...*

குடும்பத்தினர் கைவிட்டாலும் —

சங் 27:10 ... *தகப்பனும் தாயும் ...*

☐ உங்கள் பாவம் எதுவாயினும் கடவுள் மன்னிப்பார் —

பேதுரு, யூதாஸ், இருவருமே பாவம் செய்தனர்.
பேதுருவின் பாவம் யூதாசின் பாவத்தைவிடக் கொடியது.
பேதுருவோ இயேசுவிடம் திரும்பிச் சீர்பெற்றான்.
யூதாசோ தன்னையே தீர்த்துக்கொண்டு அழிந்தான்.
இயேசுவின் இரத்தம் கழுவிடமுடியா பாவமில்லை —

*''கடுஞ்சிவப்பாயிருந்தாலும் ...''* (ஏசா 1:18)

(இரகசியம்: *''வாருங்கள்!''*)

பூரணவாதிகள் நடுவிலும் தற்கொலை காணப்படுகிறது!
சில பிரசங்கிமாரின் போதனையின்படி நடக்க முடியாமல் ...

(பிர 7:16,17)

☐ கடவுள் கரத்தில் சாய்ந்திடுங்கள்.

தாவீது: சங் 31:12 ... *செத்தவனைப் போல ...*

:15ஆ ... *என் காலங்கள் உம் கையில்*

### ■ கூடுதல் சிந்தனைகள்

☐ *வாழ்நாள் குறைவு ... வருத்தம் மிகுதி ...*

*நாட்களின் எண்ணிக்கை கடவுளிடம்* (யோபு 14:1,5)

☐ *கழுத்துவரை ... அமிழ்ந்து ... விண்ணப்பித்து* (சங் 69:1-3,13,14)

☐ *கர்த்தர்மேல் பாரத்தை வைத்து, வென்றிடுங்கள்* (சங் 55:6,22)

☐ *நம்மைத் திரும்ப உயிர்ப்பிப்பார் ... மேன்மை* (சங் 71:20,21)

☐ *பலத்திற்கு மிஞ்சி ... தேவன் மீது நம்பிக்கை* (2 கொரி 1:8-10)

(பார்க்க: பக்கங்கள் 768-772)

## 10. வரவிருக்கும் மகிமையை மறக்கக்கூடாது.

Do not lose hope of future glory.

- இறப்பின் துக்கம் குறித்துப் பேசுகையில் பவுல் சொன்னது,
  *''நம்பிக்கையற்றவர்போல் துக்கிக்கக்கூடாது!''*
  1 தெச 4:13

  துக்கம் தவறல்ல; நம்பிக்கையற்ற துக்கமோ பயனற்றது.
  பழைய ஏற்பாட்டில்கூட, தாவீது இவ்விதத் துக்கத்தை
  நித்தியத்தைப் பற்றிய எண்ணத்தாலேயே மேற்கொண்டான் —
  2 சாமு 12:22,23 ... *நான்தான் பிள்ளையிடம் போவேன்!*

- ஆம், அனைத்துத் துக்கங்களுக்கும் முடிவு கிறிஸ்துவின் வருகையே —

  1 தெச 4:16-18 ... *இவ்வார்த்தைகளால் தேற்றுங்கள் ...*
  கிறிஸ்துவின் வருகையும் சபை எடுத்துக்கொள்ளப்படுதலும்

  இதுதான் பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசன எதிர்பார்ப்பு —
  ஏசா 35:3,4 ... *தளர்ந்த கைகள் ... அவர் வருவார்*
  :10 ... *சஞ்சலமும் தவிப்பும் பறந்துபோகும்*

- நமது விசுவாசத்தைப் புதுப்பொலிவுடன் கிறிஸ்துவின் வருகையில்
  முன்வைக்கவே வாழ்வில் வேதனைகள் வருகின்றன —

  1 பேது 1:6,7 ... *பொன்னிலும் விலையுயர்ந்த விசுவாசம்*

- விட்டுவிடலாமா என்ற சோதனை எக்கட்டத்திலும் வரலாம்;
  கிறிஸ்து வருகிறாரென்ற உணர்வோ விடாது முன்செல்ல
  நம்மை ஊக்குவிக்கும் —
  எபி 10:35 ... *தைரியம்*
  :36 ... *மனவுறுதி* (பொறுமை)
  :37 ... *கொஞ்சக் காலம்தான் ... வந்துவிடுவார்!*

பிரசவிக்கும் வேளையில் அப்பெண்ணிடம் சொல்லப்படும்
ஊக்க வார்த்தைகள் போன்றவை இவை!

யோ 16:21 ... *பிரசவக் காலம்!* (இயேசுவே சொன்னது)

- எனவேதான் இயேசு இப்படிச் சொன்னார்

  யோ 14:1-4 ... *கலங்க வேண்டாம் ... உங்களுக்கு ஓரிடம் ...*

- இந்த அறிவினால்தான் ''துன்ப துக்கங்களை'' அப்போஸ்தலர் *''இலகுவான உபத்திரவம்''* என்றனர் —

  2 கொரி 4:17,18

  *''இலகுவான'' உபத்திரவம் vs. ''கனமான'' மகிமை*
  *''கொஞ்சக் காலம்'' vs. ''நித்திய காலம்''*

மோசே சொன்னது இதுவே: சங் 90:4

மண்ணுலகில் 1 நாள் விண்ணுலகில் 1000 ஆண்டுகள்!
அதாவது, மண்ணுலகின் ஒவ்வொரு மனதுக்க நாளுக்கும்
விண்ணுலகில் ஆயிரமாண்டு மகிமை வாழ்வு காத்திருக்கிறது!

பேதுரு இதை ஆமோதித்துள்ளான்: 2 பேது 3:8

எனவே பவுல் இப்படிச் சொன்னான்:

*''இன்றையப் பாடுகள் இனிவரும் மகிமைக்கு ஈடாகா''*

ரோ 8:18

- குணமாக்க முடியாத வேதனை மிகுந்த வியாதியால் அவதியுறுகிறீர்களென்று வைத்துக்கொள்வோம் —

  ஜெபத்துடன் கர்த்தர் கிருபையையே நம்பியிருங்கள்.
  அதே வேளையில், உயிர்த்தெழுதலில் உங்கள் உடல்
  மகிமைப்படப்போகிறதையும் மறவாதிருங்கள் —

  ரோ 8:21,23 ... *தவிக்கிறோம் ... உடலின் மீட்பு*

இப்படித்தான் உடல் வேதனையை யோபு சகித்தான் —

யோபு 19:25-27 ... *என் மீட்பர் உயிரோடு ... எனது தோல் ...*
கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் பற்றிய அரிய ப.ஏ. வசனம்.

நித்தியத்தில் நமது உடல்கள் மகிமையடையவிருப்பதே
அப்போஸ்தலரின் ஏக்கமாயிருந்தது —

2 கொரி 5:1,2 ... *இக்கூடாரம் ... தவித்து ... நித்திய வீடு*

- எதிர்காலம் குறித்த பயம் ஒழியட்டும், நம்பிக்கை ஓங்கட்டும்!

படு மோசமாய் என்னதான் நடக்கக்கூடும்? அது நடக்குமா?
— என்று கேட்டுக்கொள்ளுங்கள்.

என்னதான் நடக்கும், நடக்கட்டுமே!

நாம் கவலைப்படுவதில் 40 சதவீதம்கூட நடப்பதேயில்லையாம்!

ஓர் அலுவலகத்தில் சுவர் வாசகம்:

**''கலங்காதே; அது நடக்காமலே போகலாம்!''**

- நமது வாழ்வில் நடப்பது நல்லதோ தீயதோ,
முடிவில் அது நமது நன்மைக்காகவே!

ரோ 8:28 ... *எல்லாம் நன்மைக்கே ...*

(பல்வேறு இன்னல்கள்: வச 35-39)

நமக்கு விரோதமாய்த் தீட்டப்படும் சதித்திட்டங்களும்
நமக்குச் சாதகமாகவே முடிந்துவிடும் —

(உ-ம்) யோசேப்பு (ஆதி 50:20)
எகிப்தில் இஸ்ரவேலர் (யாத் 1:11,12)
தேவன் அனுமதிப்பதெல்லாம் (சங் 66:10-12)
*''வலை ... தீ ... வெள்ளம் ... பாதுகாப்பு''*

- **முடிவுரை**

சங் 73:21 ... *மனம் கசந்தேன்*
:24 ... *மகிமையில் ஏற்றுக்கொள்வீர்*
:25 ... *உம்மைத் தவிர எனக்கு யார்?*

*எல்லாம் இயேசுவே, எனக்கெல்லாம் இயேசுவே,*
*தொல்லை மிகும் இவ்வுலகில் துணை இயேசுவே!*

## ■ கூடுதல் சிந்தனைகள்

- ☐ நித்தியத்தில் துக்கமே இல்லை (வெளி 21:4)
- ☐ *நெருக்கப்பட்டாலும் ஒடுக்கப்பட்டாலும்*
  உயிர்த்தெழுதலில் நம்பிக்கை (2 கொரி 4:8,10-13)
- ☐ *கண்ணீர் யாவையும் துடைப்பார்:* எப்பொழுது?
  மரணம் விழுங்கப்படும்போது (ஏசா 25:8; வெளி 7:16,17; 21:4)
- ☐ பாடுகளின் நீண்ட பட்டியலில் *"பொறுமையே"* முதலாவது
  (2 கொரி 6:4,5)
- ☐ *ஆறுதலளிக்கும் திரியேகர்:* (ரோ 15:5; 2 கொரி 1:5; அப் 9:31)
- ☐ கண்ணீரே இல்லாத நாட்டைக் காணும்வரை
  தேவன் கண்ணீரால் நமது கண்களைக் கழுவுகிறார்.
- ☐ உங்களது பெரிய வெள்ளி நீண்டதாயிருக்கலாம்;
  ஆனால் அது முடிவல்ல, ஈஸ்டர் ஞாயிறு வருகிறது!

(பார்க்க: பக்கங்கள் 786-789)